© 2022 IJNRD | Volume 7, Issue 9 September 2022 | ISSN: 2456-4184 | IJNRD.ORG

IJNRD.ORG ISSN : 2456-4184
INTERNATIONAL JOURNAL OF NOVEL RESEARCH AND DEVELOPMENT (IJNRD) | IJNRD.ORG
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# குன்னம் வட்டார நாட்டுப்புற வழக்காற்றியலில் உள்ள மாந்திரங்கள்

Devi Dass

ஆய்வுச் சுருக்கம்:

குன்னம் வட்டார மக்களின் வழக்காறுகளில் மந்திரங்க்ள சொல்லப்பட்டு வந்ததை இக்கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இம்மந்திரங்கள் அறிவியல், சமயம், சார்ந்ததாக கூடுதல் ஒப்புமையைக் கொண்டுள்ளது. மந்திரவாதிகளோம் இயற்கையின் விதிகளை தன் விபரம் கட்டுப்படுத்தி நினைப்பதை அடைய முயலுகிறார்கள். மந்திரம் கொள்கை சார்ந்தது. செய்முறை சார்ந்தது. சமுதாய நலனுக்காக இன்று தூய மந்திரம் மனித நலனுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. விளக்குகள் கிடைக்கவும், விளைச்சல் பெருகவும் நோய்களைத் தீர்க்கவும் தூய மந்திரம் பயன்படுத்தப்படுகிறது. பேய், கெட்ட ஆவி, ஏவல் ஒரு சமூகத்திற்கு எதிராக ஏதுவது இம்மந்திரத்தின் தன்மையாகும்.

ஆய்வுத்தலைப்பின் விளக்கம்

மந்திரங்கள் குன்னம் வட்டாரப் பகுதியில் மந்திரவாதிகள் தூய மந்திரம், தீய மந்திரம் என்று இரண்டு வகைகளில் செய்து தருகின்றார்கள். மந்திரங்கள் பழங்காலத்திருந்தே தொன்று தொட்டு வருவதால் இத்தலைப்பை எடுத்து ஆய்வு செய்யப்பட்டது. குன்னம் வட்டாரத்தில் மந்திரங்கள் அதிகமாக நம்பிக்கை கொண்டு விளங்குகிறது.

முன்னுரை

குன்னத்தில் சமயத்தில் மந்திரம் ஒரு பிரிக்கவியலாத கூறாகும். இது அறிவியல் தோன்றுவதற்கு முந்திய கலையாகும். முதன்முதலில் இதனைக் கண்டறிந்து செயற்படுத்தியோர் தொன்மை மக்களாவர் இயற்கைச் சூழலுடன் ஒன்றி வாழ்ந்த தொன்மை மக்கள் சமயங்களில் அவர்களின் ஆற்றல்களால் இயற்கையின் சீற்றங்களிலிருந்து காப்பாற்றிக்கொள்ள இயலவில்லை.

அத்ததைய சூழலில், அவர்களையும் அவர்களைச் சார்ந்த இயற்கையையும் மீறிய ஆற்றல் இருக்கிறது என நம்பி அவ்வாற்றலின் துணையுடன் இயற்கையின் முழுப்பலனைப் பெற முன்றனர். பின்னர் அவ்வாற்றலைக் கையகப்படுத்திக் கட்டுப்படுத்தும் அல்லது மேலாதிக்கம் செலுத்தும் வழிமுறையை மேற்கொண்டனர். அவ்வாறு கையாகப்படுத்திய ஆற்றலை, சில சூத்திரங்கள் அல்லது வாய்பாடுகளாகச் சுருக்கி உச்சரிப்பதன் மூலம் அவ்வாற்றலைச் செயல்படுத்தும் நிலையை மேற்கொண்டனர். அவ்வாறு அவர்களுடைய சூத்திரம் அல்லது வாய்பாடுகளைச்

சுருக்கி உச்சரிப்பதன் மூலம் அவ்வாற்றலைச் செயல்படுத்தும் நிலையை மேற்கொண்டனர். அவ்வாறு அவர்களுடைய சூத்திரம் செய்கையும் முறையாக அமைத்துக் கொண்டபோது அவர்களை தொடர்புக் கொள்ள எண்ணிய பெர்ருளின் ஆற்றல் அவர்களுக்கு அடங்கிப்போவது தவிர வேறு வழியில்லை என்னும் ஏற்படுத்தினர்.

மேற்கூறிய நிலையை அடைவதற்குச் சில சடங்குகளையம் வழிபாடுகளையும் கடுமையான உடல் வருத்தம் செயல்களையும் மேற்கொண்டனர். இவ்வனைத்துச் செயல்களின் வெளிப்பாடக மந்திரம் அமைந்தது. இது உண்மையில் தொன்மை மக்களின் தொழில்நுட்ப பற்றாக்குறையைப் போக்கத் தோன்றிய ஒரு கற்பனைத் (போலி) தொழில்நுட்பமாகும் : கற்பபன்னைக்சுவை) என்றே சொல்லலாம்.

பிரேசரின் முக்கியமான பங்களிப்பு மூன்று கருத்துகளை அடிப்படையாகக் கொண்டதாகும். முதலில் மந்திரத்திற்கும் சமயத்திற்குமான வேறுபாட்டை விரிவான ஆராய்ந்து 1890-களில் எழுதினார்.

மந்திரத்தின் தோற்றம் அதன் செயல்முறைகள் ஆகியன தொன்மை மக்களிடம் எவ்வாறு ஏற்பட்டன என்பதை அறிய பிரேசர், டைலர், மக்லீனன், ஸ்பென்சர், ஆகியோர் முன்றனர். இவர்களில் பிரேசர் மேற்கொண்ட பரந்த அளவு ஆய்வுகள் பெருமளவு புரிதலை ஏற்படுத்தின உலகில் பல்பேறு பண்பாட்டினரிடையே தொகுத்து தரவகள் வாயிலாக மந்திரம் மேற்கொண்டவாறு அமைப்பியல்புகளைக் கொண்டுள்ளன என பிசேகர் வரையறுத்தார்.

மந்திரம்

1. கொள்கை சார்ந்தது

2. செயல்முறை சார்ந்தது.

கொள்கை சார்ந்தது

1. மந்திரம் ஒரு போலி அறிவியல்

2. ஆக்கநிலை சார்ந்தது

(எ.கா) சூனியம், ஏவல்

செயல்முறை சார்ந்தது.

1. மந்திரம் ஒரு போலிக் காலை

2. எதிர்நிலை சார்;ந்தது

(எ.கா) விலங்குகள்.

இதையடுத்து மந்திரத்தின் செயல்பாடுகள் பின்வரும் இரு கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்துள்ளதாக கூறினார்.

1. ஒத்தது ஒத்ததை உருவாக்குகிறது

2. ஒருமுறை தொடர்பு கொண்டால் தொடர்ந்து தொடர்பு கொண்டிருக்கும்

மேற்கூறிய இரு கோட்பாடுகளின் செயல்முறையில் இரு விதிகள் அடங்கியள்ளதாகப் பிரேசர் (1890 /19666 : 12-14) விளங்கினார். முதல் கோட்பாடு ‘ஒத்த விதி’ எனப்படும்.

இவ்விதியோடு தொடர்புடைய மந்திரம் ‘ஒத்த மந்திரம்’ அல்லது ‘பாவணை மந்திரம்’ எனப்படும்.

இரண்டாம் கோட்பாடு ‘தொடர்பு’ அல்லது ‘தொத்து விதி’ எனப்படும். இவ்விதியோடு தொடர்படைய மந்திரம் தொத்து மந்திரம் ஆகும். ஒத்தவிதி, தொத்து விதி ஆகிய இரு விதிகளும் மந்திரச் செயலுறவகளைப் பொறுத்து அளவில் ஒரே வகையாக இருப்பதால் அவற்றை ஒத்துணர்வு மந்திரம் என்னும் ஒரே வகைக்குள் அடக்குவார் பிரேசர். இதற்கக் காரணம் இரண்டு மந்திரங்களாலும் ‘காரணமும் வினையும்’ அல்லது ‘வினையும் பயனும்’ ஒன்றாக இருப்தேயாகும் என்பார். இக்கருத்துகளைப் பிரேசர் பின்வரும் வரைபடம் மூலம் விளக்குகிறார்.

ஒத்துணர்வு மந்திரம்

1. ஒத்த மந்திரம்

2. தொத்து மந்திரம்

ஒத்த மந்திரத்தல் ‘ஒத்தது ஒத்ததை உருவாக்குகிறது’ என்பது விதியாகும். தருவதும் குன்னத்தில் வழக்கங்களாக உள்ளன. இச்செயல்கள் அனைத்திலும் அடைய விரும்புவதும் அதற்காகச் செய்யப்படுகின்ற செயலும் ஒத்துள்ளன. ஆதலின், இது ஒத்த மந்திரத்தின் அடிப்படையில் நிகழ்கிறது.

தொத்து மந்திரத்தில் ‘ஒருமுறை தொடர்பு கொண்டது தொடர்ந்து தொடர்பு கொண்டேயிருக்கும். என்பது விதியாகும். அதாவது மந்திரத்தின் மூலம் விரும்பிய ஒன்றுடன் ஒருமுறை தொடர்பு கொண்டு விட்டால் அது தொடர்ந்து அதனுடன் தொடர்பு கொண்டு எண்ணியதை நிறைவேற்றும். கன்றை ஈன்ற பசுவின் இளங்கொடியினை ஆல், அத்தி போன்ற பால் மரத்தின் மீது கட்டும் பழக்கம் தொத்து மந்திரத்தின் அடிப்படையில் அமைந்ததே. பசுவுடன் தொடர்புடைய இளங்கொடியைப் பால்மரத்தைப் போல் பால் வளத்துடன் இருக்கும் என்னும் நம்பிக்கையே இச்செயலுக்குக் காரணமாகும்.

வேட்டையிலும், வணிகத்திலும் நல்ல பலன் கிடைக்கவும், பயிர்கள் செழித்து வளரவும், கால்நடைகள் பெருகவும் மந்திரம் பயன்படுத்தப்பட்டது. அவற்றோடு இயற்கையின் சீற்றங்களிலிருந்து தப்பிக்கவும் மந்திரம் பயன்படுத்தப்பட்டது. பின்னர் காலப்போக்கில் தொன்மை மக்கள் மந்திர ஆற்றலைப் பல வகைளில் அவரவர் விருப்பம்போல் பயன்படுத்தத் மந்திரங்க்ள தூய மந்திரம், தீய மந்திரம், உற்பத்தி மந்திரம் பாதுகாப்பு மந்திரம், அழிப்பு மந்திரம் எனப் பலவாறாக ஏற்பட்டன.

இயற்கையின் கொடூரங்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ளவும் பாதுகாப்பு மந்திரம் பயன்படுத்தப்படுகிறது. தங்களிடமுள்ள குறைகள், தீமைகள் போன்றவற்றைப் பிற உயிரிகள் அல்லது பொருள்;களுக்கு மாற்றிவிட மந்திரம் பயன்படுகிறது.

மந்திரம்

1. போலி அறிவியல் தன்மை கொண்டது.

2. போலியான காரண – கரிய உறவை அடிப்படையாக் கொண்டது.

3. கட்டாயத்தின் பேரில் நிகழ்த்தப்படுவது.

4. ஆவிகளை வினைபுரியச் செய்து நிவர்த்த வேண்டுதல்

5. அச்சம், திகில், கொண்டது. பேரச்சம், கடும் விளைவும், பயங்கரம் சார்;ந்தது.

6. மந்திரத்தில் நன்மந்திரம் தீய மந்திரம் இரண்டுமுண்டு

7. இரகசியமாகச் செய்யப்படுவது.

8. மந்திரவாதி, ஏவல், வினை செய்பவர்களால் செய்யப்படுவது. மேற்கூறிய தனிமனித முயற்சியால் செய்யப்படுவது.

9. மேற்கூறிய தனிமனித மாந்தரீகர்கள் அச்சத்திற்கு உரியவர்கள்

10. மிகத் தொன்மையானது.

சமயம்

1. நம்பிக்கையை அடிப்படையாகச் கொண்டது.

2. நம்பிக்கை அடிப்படையிலான காரண காரிய விளக்கங் கொண்டது.

3. உண்மையான பற்றுதலினால் நிகழ்வது.

4. பணிந்து குறையுரைத்து நிவர்த்த செயல்படுத்தப்படுவது.

5. நன்மை மட்டுமே விளையக் கூடியது.

6. நன்மை, தீமை என்னும் இரட்டை நிலை இல்லை. பணிந்து வணங்கினால் நன்மை மட்டுமே ஏற்படும்.

7. இரகசியம் ஏதுமில்லை அனைவரின் முன்னிலையில் செய்யப்படுவது.

8. பூசகர் என்னும் சமூகத்தவரால் செய்யப்படுகிறது.

9. பூசகர்கள் அச்சத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அன்பு காட்டுப்பவர்கள். மந்திர ஆற்றலுக்குப் பிந்தையது.

முடிவுரை :

இன்றைய அறிவியலின் மிகத் தொடக்ககால சிந்தனை நிலையே மந்திரம் ஆகும். மக்களின் சிந்தனையானது மந்திரம் சமயம் அறிவியல் என்னும் மூன்று பெரும் நிலைகளில் படிமலர்ச்சியடைந்துள்ளது. மக்களின பண்பாட்டில் மந்திரம் பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றது. இதன் செயல்பாடுகள் ஆக்கநிலை சார்ந்தும் எதிர்நிலை சார்ந்தும் செயல்படுத்தப்படுகின்றன.

தே.ஞானசேகரன் இத்துறையில் மிகச் சிறப்பான களப்பணித் தரவுகளுடன் இரண்டு நூல்களை எழுதியுள்ளார். மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள் (1987) என்னும் நூலும் மந்திரம் சடங்குகள் சமயம் (2000) என்னும் நூலும் மதுரை மாவட்டத்தை ஆய்வுக்களமாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும். இவர் மந்திரம் சடங்குகள் இரண்டையும் ஒருங்கிணைத்து விரிவான களங்களில் ஆய்வை மேற்கொண்டுள்ளார். மேற்கூறிய ஆய்வுகளை நோக்கும் போது குன்னத்தில் சமயநம்பிக்கைNயு மந்திரத்திற்கான ஆதாரமாக விளங்குகிறது. சடங்குகள் இதற்கு ஊடகமாக உள்ளன.

குன்னம் வட்டாரத்தில் இதை ஒத்து விளங்குவதால் சமய நம்பிக்கை இன்னும் இடைப்பட்ட நிலையிலேயே உள்ளது. ஆவிவழிபாடு பல கடவுள் வழிபாடு ஒரு கடவுள்

வழிபாடு என்ற மூன்று பருநிலையிலான படிமலர்ச்சியில் பல கடவுள் வழிபாட்டை தமிழர்கள் கொண்டுள்ளார்கள். மேலும் இதில் இரண்டு அடிப்படையான போக்குகள் உண்டு. ஒன்று வைதிகநெறி. மற்றொன்று நாட்டார்நெறி. வெகுசன மக்களின் சமய நம்பிக்கையில் தாந்தரீகம் ஒரு முக்கியக்கூறாக உள்ளது. தாந்தரீகத்தில் மதுவும் பெண் தெய்வங்களும் இன்றியமையாதன. வைதிக நெறியின் செல்வாக்கின் காரணமாக சம்ஸ்கிருதவயமாக்கல் ஏற்பட்டு மதுவுக்குப் பதிலாக பால் அந்த இடத்தைப் பெற்றுள்ளது. மதுவின் எச்சமாகவே பால் இடம் பெறுகிறது எனலாம். மந்திரத்தின் தன்மைகளை அறிவதற்குச் சடங்குகளை நோக்க வேண்டும். பெரும்பாலும் சடங்குகள் வாயிலாகவே மந்திரம் செயல்படுத்தப்படுகிறது. இது அந்தந்தச் சமூகத்தின் சமய நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது.

இவ்வாறு மனித சமூகத்தின் தொடக்க நிலையான வேட்டைநிலை தொடங்கி இன்றைய தொழில்துறைச் சமூகம் வரை மந்திரத்தின் தளம் வெவ்வேறு வடிவங்களில் இடம் பெற்றுள்ளது. தொடக்கத்தில் அதன் தளம் விரிந்தும் நேரடியாகவும் வெளிப்படையாகவும் காணப்பட்டதெனில் அடுத்தடுதடத கட்டங்களில் அது சுருங்கி வெளிப்படை உருவமல்லாமல் மாற்று வடிவங்களில் பரிணமித்து வந்திருக்கிறது.